
# கண்ணிவெடி அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான கல்வி

## மாணவர் செயற்பாட்டுப் புத்தகம்




unicef

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான கல்வி

## மாணவர் செயற்பாட்டுப் புத்தகம்

**STUDENT'S ACTIVITY BOOK**
**FOR SECONDARY EDUCATION**

## சமூகக்கல்வியும் வரலாறும்

**UNICEF**
யுனிசெப்

தேசிய கல்வி நிறுவனம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுனிசெவ் பிராந்தியப் பிரதிநிதியிடமிருந்து ஆசிச் செய்தி

யுத்த நிறுத்தமானது கண்ணிவெடி ஆபத்து பற்றிய கல்வியின் (க.ஆ.க.) அவசரத் தேவையை உருவாக்கியுள்ளது. ஏனெனில் அநேக குடும்பங்கள் பெருமளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள தங்களது பூர்வாங்க இடங்களுக்குத் திரும்புகின்றன.

20 வருட போரின் விளைவாக எண்ணிலடங்காத **uxo** மற்றும் கண்ணிவெடிகள் என்பன வடக்கிலும் கிழக்கிலும் கைவிடப்பட்டுள்ள நிலையிலுள்ளன. இவற்றுள் பல வதிவிடங்களுக்கும் மக்கள் வசிக்கும் இடங்களுக்கும் அருகாமையில் அமைந்துள்ளன. கண்ணிவெடியினாலும் **uxo**வினாலும் தோற்றுவிக்கப்படும் அச்சுறுத்துதலின் உள்ளவாறான அளவைக் கண்டறிவதே தற்போதைய மதிப்பீட்டினதும் பகுப்பாய்வினதும் குறிக்கோளாகும். ஆனால் இந்த இடைக்காலத்தில் கண்ணிவெடி ஆபத்து பற்றிய கல்வி இன்றியமையாதது.

இலங்கை யுனிசெவ் நிறுவனம் கண்ணி வெடியினால் பாதிக்கப்பட்ட தனியாட்களினதும் குடும்பங்களினதும் சமுதாயங்களினதும், விசேடமாகக் கண்ணிவெடியினால் விபத்திற்குட்பட்டு உயிர் வாழ்பவர்களினது தேவைகளும், உரிமைகளும், நலன்களும் பாதுகாக்கப்படுவதனையும் அவற்றிற்கு மதிப்பளிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது. குறிப்பாகக் கண்ணிவெடி ஆபத்துப் பற்றிய கல்விக்கு முன்னணி வகிக்கும் ஐ.நா. முகவராண்மை என்ற வகையில் யுனிசெவ் எங்கெங்கு தேவை ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் கண்ணிவெடி ஆபத்துப் பற்றிய கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காகப் பணியாற்றுகின்றது. இது தொடர்பில் யுனிசெவ் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட கண்ணிவெடி ஆபத்துப் பற்றிய கல்வி தொடர்பான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாகக் கல்வித் திட்டத்தினுள் க.ஆ.க. வையும் உட்படுத்துவதற்குத் தேசிய கல்வி நிறுவகத்திற்கு ஆதரவளிக்கின்றது. சிறுவர்களும் இளைஞர்களும் பாதுகாப்பான நடத்தையைப் பற்றி கற்றறிவதை உறுதிப்படுத்துவதற்குக் கண்ணிவெடி ஆபத்துப் பற்றிய கல்விக்கு கச்சிதமான அமைவிடம் பாடசாலைகளே. கண்ணிவெடி தொடர்பான காயங்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இது அத்தியாவசியமாகும்.

இக்கையேடு, க.ஆ.க. தொடர்பாகத் தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட பாடங்களையும் அறிவுரைகளையும் எடுத்துரைக்கின்றது. இது க.ஆ.க. நிகழ்ச்சித் திட்டம் பற்றிய திட்டங்களையும் பணிகளையும் பொறுப்புக்களையும் தெளிவுபடுத்துகின்றது.

கண்ணிவெடி மற்றும் **uxo** காயங்கள் தொடர்பான ஆபத்துக்களைக் குறைப்பதற்கு இக்கையேடு அதன் பாவனையாளர்களுக்கு பயனுள்ள ஒரு கருவியாக அமையும் என உண்மையாகவே நம்புகின்றேன், இத்திட்டம் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

டெட் சைபான்
யுனிசெவ் பிரதிநிதி
இலங்கை யுனிசெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE UNICEF COUNTRY REPRESENTATIVE

The cease-fire has created an urgent need for mine risk education (MRE) as many families return to their places of origin, which are often heavily mined.

Twenty years of conflict has resulted in an unquantifiable number of unexploded ordnances (UXO) and landmines abandoned in the North East, many of which are located near dwellings and areas where people live. The actual extent of the threat by both mines and UXOs is the object of ongoing survey and analysis. But in the interim, mine risk education is critical.

UNICEF Sri Lanka is committed to ensure that the needs, rights and welfare of mine affected individuals, families, communities, and especially mine/UXO survivors, are respected and protected. In particular, as the lead UN agency for MRE, UNICEF works to ensure that mine risk education activities take place wherever the need exists. In this regard, UNICEF, in addition to the support for community based mine risk education activities, is also supporting the National Institute of Education to incorporate MRE within the education system. Schools are the ideal location for mine risk education activities to ensure that children and youth learn safe behaviour. This is essential to ensure the protection of children from mine related injuries.

This manual sets out the lessons and instructions developed by the National Institute of Education with regard to MRE. It clarifies the lesson plans and the role and responsibilities of the MRE programme.

I sincerely hope that all users of this manual will find it a useful tool for the reduction of risk of landmines and UXO injuries. I wish the programme all success.

Mr. Ted Chaiban
Representative
UNICEF Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## மிதிவெடி அபாயம் பற்றிய கல்வி

விஞ்ஞானம், தொழல்நுட்பம் என்பவற்றின் முன்னேற்றத்தினால் ஏற்படும் பொருள்சார் அபிவிருத்தி இடம்பெறுகின்ற அதே நேரத்தில், மனித முன்னேற்றத்தில் மக்கள் சிலர் வைத்திருந்த நம்பிக்கையைப் பொய்யாக்கி, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிரிவினைச் சக்திகள் சமகால உலகை வன்முறை உலகாக மாற்றியுள்ளது. இதன் பயனாக, மனித வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு, கொடிய உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களைப் பயன்படுத்தி நாடுகளிடையே இடம்பெறும் மோதல்கள் முதல், நாடுகளின் உள்ளே பல்வேறு இன, சமய, அரசியல் குழுக்களுக்கிடையே ஏற்படும் சிதறலான மோதல்கள் வரை சச்சரவுகள் மேலோங்கி நிற்கின்றன. டெலோர்ஸும் (1996) மற்றவர்களும் தம்முடைய அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

*"வரலாறு முழுவதிலும் எப்பொழுதும் போர்கள் நிகழ்ந்து வந்துள்ளன. ஆனால், 20ஆம் நூற்றாண்டில் குறிப்பாக, சுய அழிவை ஏற்படுத்துதல் தொடர்பாக மனித இனம் பெற்றுள்ள அசாதாரணமான ஆற்றல் என்பன போன்ற புதிய காரணிகள் அபாயத்தை வலியுறுத்துகின்றன."*

இந்தப் பின்னணியில், கல்விக்கு இரண்டு வித பாகங்கள் உண்டு. மற்றவர்களுக்கும், அவர்களுடைய பண்பாடுகள், ஆன்மீக விழுமியங்கள் என்பவற்றிற்கும் மரியாதை செய்யும் பண்பை விருத்தி செய்வதன் மூலம் மனித நடத்தையை மாற்றி அமைப்பதை அது நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

அதேவேளை, கலகக்காரர்களின் உயிரை மட்டுமன்றி எவ்வித பாவமுமறியாத அப்பாவி மக்களின் உயிரையும் கவருவதற்குப் பயன்படுத்தப்படும் அழிவாயுதங்களினால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்தும் விளைவுகளிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய கல்வியையும் அது மக்களுக்குப் புகட்ட வேண்டும்.

எதிர்த் தரப்பினரை அழிப்பதற்கும் தமக்கொரு பாதுகாப்பாக அமைவதற்கும், குறிப்பாக மிதி வெடிகள் அபரிமிதமான எண்ணிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள, நீடித்துச் செல்லும் உள்நாட்டுச் சச்சரவுகளுக்காளாகியிருக்கும் நாடுகளில் மிதிவெடி அபாயம் பற்றிய கல்வி தவிர்க்க முடியாததோர் அம்சமாகிவிட்டது. போர் முடிந்த பின்னர் கூட, இவை குடிமக்களின் வாழ்விற்கு ஓர் அச்சுறுத்தலாக உள்ளன.

19 வருடங்களாக உள்நாட்டுப் போருக்கு இலக்காகியிருக்கும் இங்கை, இந்நிலைக்கு விதிவிலக்கல்ல. எனினும், ஆயுதப் போர் இடம்பெறும் பிரதேசங்களில், பரஸ்பரம் ஆயுதப் போரை நிறுத்துவதெனவும் போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்துவதெனவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதெனவும் 2002இல் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை, பிரச்சினைக்கு, ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை வழங்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆகவே, மக்களின் சமூக வாழ்விற்கும் புத்துயிரூட்டுவதற்கான ஒரு சூழலை இந்நிலைமை உருவாக்கியுள்ளது. இதுதொடர்பாக கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டியது ஓர் அத்தியாவசியமான விடயமாக இருப்பதால், மிதி வெடி அபாயம் பற்றிய கல்வியை வழங்குவதற்கான வழிவகைகளை ஆராய்தல், பெறுமதி மிக்கதொரு பணியாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளுக்குள் அகப்படாமல் தடுத்தல் பற்றிய கல்வியைப் பிள்ளைகளுக்கு வழங்கும் நோக்கத்தைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டு, தேசிய கல்வி நிறுவகம் யூனிசெ.'ப் என்ற அமையத்துடன் இணைந்து, மிதி வெடி அபாயம் பற்றிய கல்வி சம்பந்தமான ஒரு செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இது, பாடவிதான உள்ளடக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் ஆசிரியர்களுக்கான வழிகாட்டி ஒன்றையும் தயாரித்துள்ளது. இளையோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகச் சுவரொட்டிகளும் படங்களைக் கொண்ட புத்தகங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அபாயங்களைத் தவிர்ப்பதற்கான விழிப்புணர்வை இளையோரிடையே உருவாக்குவதற்கும் நாடுகள் மிதி வெடிகளை உற்பத்தி செய்தல், அவற்றைப் பயன்படுத்துதல் என்பன சம்பந்தப்பட்ட கொள்கைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை அவர்களிடையே உருவாக்குவதற்குமாக அச்செயற்திட்டம் ஊடறுத்துச் செல்லும் பாடவிதானத்தையும் பல முனைகள் கொண்ட அணுகு முறைகளையும் மனதிற்கொண்டுள்ளது. பொதுமக்கள் எழுப்பும் குரலின் வலிமை, நாடுகள் மிதி வெடிகளைத் தயாரிக்கலாகாதெனவும் நாடுகளின் படைகள் மிதி வெடிகளைப் பயன்படுத்தலாகாதெனவும் கட்டாயப்படுத்துதல், மிதிவெடிகளினால், பல்வேறு நாடுகளிலும் ஏற்படுத்தப்படும் சேதத்தின் பயங்கரத் தன்மை, மிதி வெடிகளைக் கிண்டியெடுத்தல் தொடர்பாகத் தொண்டர் அமையங்கள் வழங்கும் பங்களிப்பு, மிதிவெடிகளினால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கும் குடும்பங்களுக்கும் புனர்வாழ்வளித்தல் என்பன போன்றவை, மிதிவெடி அபாயம் பற்றிய கல்வி என்ற எண்ணக் கருவை முன்னேற்றுவதன் மூலம் அணுகப்படக்கூடிய சில பிச்சினைகளாகும்.

கலாநிதி ஜீ.பீ. குணவர்தன
பணிப்பாளர் தலைமையதிபதி
தேசிய கல்வி நிறுவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOREWORD

**Mine-risk Education**

Alongside the material development created by the rapid advancement of science and technology, the divisive forces have made the contemporary world, too often a world of violence that belies the hope some people placed in human progresses. The result being escalated clashes ranging from wars between countries using deadliest weapons ever made in the history to sporadic collisions between various ethnic, religious and political groups within the countries. Delors (1996) and others in their report state:

> "There has always been conflict throughout history, but new factors are accentuating the risk, in particular the extraordinary capacity for self-destruction humanity has created in the course of the twentieth century."

The education has a dual role to play in this arena. It should aim at changing the human behaviour to avoid conflict or resolve them peacefully by developing respect for other people, their cultures and their spiritual values.

At the same time it should educate the people to escape the dangers and consequences of destructive weapons so often being used claiming not only lives of rioters but also the lives of innocent people.

'Mine-risk education' has become an imperative part in this respect especially in countries subjected to protracted civil strives where the land mines have been used in excessive numbers to destroy the rival parties as well as a protective covering. Even after the termination of war, these pose a threat to the lives of civilians.

Sri Lanka, which has experienced a 19 - year civil strife, is no exception to this situation. Yet, with the signing of the MOU in 2002 to mutually halt all armed hostilities in the conflict areas and the ensuring ceasefire and peace talks have led to hope and optimism that an admissible solution to the problem is a reality. The situation has thus created an atmosphere conducive to the revival of social and intellectual life of the people. As promotion of education is an essential ingredient in this context, exploring ways and means to promote 'Mine-risk' education is a valued task.

The National Institute of Education in collaboration with the UNICEF has initiated a project on 'Mine-risk' education the principal aim of which is educating children with a view to preventing them from falling victims to the land mines planted in the conflict affected areas. It has introduced the content of the curriculum and a guide for teachers has been prepared. In order to create awareness among the young, posters and picture books have been designed.

The project is envisaging cross-curricular and multipronged approaches that would create awareness of avoiding risks and also policy issues related to the production and use of land mines by statutory states. The strength of public voice, lobbying for compelling states not to manufacture and use land mines by their forces, the gravity of the damage caused by land mines in different countries, the roles played by voluntary organizations with regard to unearthing mines, rehabilitation and revival of persons and families victimized by land mines are some of the issues that may be addressed by furthering the concept of mine-risk education.

**Dr. G. B. Gunawardena**
**Director General**
**National Institute of Education**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனை :

Dr. G.B. குணவர்தன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

வைத்திய கலாநிதி கிரந்தி விஜேயமான்ன
சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அதிகாரி
யுனிசெப், இலங்கை.

திரு. ஹனொக் பாலவி
தொழிநுட்ப ஆலோசகர்,
கண்ணிவெடி செயற்பாடுகள்
யுனிசெப், இலங்கை.

செல்வி. சொமியா பொர்சன்
துறை நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்
(சிறுவர் பாதுகாப்பு)
யுனிசெப், இலங்கை.

திருமதி. பத்மினி ரணவீர
நிகழ்ச்சித்திட்ட அதிகாரி
யுனிசெப் இலங்கை

திரு. சரத்சந்திர ஜயவர்தன
ஆலோசகர்
யுனிசெப், இலங்கை

திரு. எஸ். மகாலிங்கம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
வடக்கு கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. K.W.H.A. சோமரத்ன
முன்னாள் கல்விப் பணிப்பாளர்

திரு. மகேசன் பத்மசங்கர்
மாவட்ட இணைப்பதிகாரி,
யுனிசெப், கிளிநொச்சி.

ஜனாப் எஸ்.எஸ்.எம். ஹக்கீம்
மாவட்ட இணைப்பதிகாரி, யுனிசெப், வவுனியா.

திருமதி. லியோனி பார்ன்ஸ்
(வடகிழக்கு மாகாண கண்ணிவெடி
செயற்பாட்டு தொழில் நுட்ப
ஆலோசகர்)

திரு. கலாகீர்த்தி எட்வின் ஆரியதாஸ
(ஊடகவியல் ஆலோசகர்)

எழுத்தாக்கம் :

திரு. M.H.M. தயானந்த - ஓய்வுபெற்ற
ஆசிரிய ஆலோசகர்
திருமதி. G.L.W.C. பத்மினி டி சில்வா -
ஆசிரிய ஆலோசகர் - தும்பறை
திருமதி. L.M.W. அமரக்கோன் -
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் - தும்பறை
திருமதி. புஷ்பா ஏக்கநாயக்க -
ஆசிரிய ஆலோசகர் - வென்னப்புவ
திருமதி. M.D.N. குணத்திலக்க -
ஆசிரிய ஆலோசகர் - எம்பிலிப்பிட்டிய
திருமதி. A.A. தர்மாவதி -
ஆசிரிய ஆலோசகர் - குளியாப்பிட்டிய
திரு. K. சங்கரலிங்கம் -
ஆசிரிய ஆலோசகர் - கல்முனை
திரு. K. செல்வப்பிரகாசம் -
ஆசிரிய ஆலோசகர் - யாழப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. D.M.D. ஜெனிதா மானல் தசநாயக்க - ஆசிரிய ஆலோசகர் தங்கொட்டுவை

திரு. இ. இராஜேஸ்வரன் - உ.க.ப. ஆரம்பக் கல்வி, மாகாணக் கல்வி அமைச்சு வ.கி.மா

திரு. ச. மைக்கல் திலகராஜா - உ.க.ப. (உடற்கல்வி) வலயக்கல்விப் பணிமனை முல்லைத்தீவு

திருமதி. உ. கிருஷ்ணகுமாரி - (ஆசிரியை) இ.கி.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை.

ஓவியம்: ஸ்ரீபால விக்கிரமாராய்ச்சி - சித்திர ஆலோசகர்

மொழித் தொகுப்பும் சீராக்கமும்:

திருமதி பி. செல்வின் இரேனியஸ் (உ.க.ப) மாகாண கல்வித் திணைக்களம் வடக்கு கிழக்கு மாகாணம்

ஜே.எம். யூசுப் (உ.க.ப) வலயக் கல்வி அலுவலகம் திருகோணமலை.

மொழிபெயர்ப்பு உதவியாளர் தமிழ்:

செல்வி. கே. வள்ளியம்மா மாகாண கல்வி அமைச்சு வடக்கு கிழக்கு மாகாணம்.

செயற்றிட்ட உதவியாளர்: ஜனாப் F.M. நவாஸ்தீன் உதவி செயற்றிட்ட அதிகாரி தேசிய கல்வி நிறுவகம்

அலுவலக உதவி : திரு. பிரியந்த அதுலத்முதலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம

திருத்தம்


| பக்கம் | தரம் | செயற்பாட்டு இலக்கம். |
|---|---|---|
| 1-3 | 7 | 1 |
| 4-7 | 7 | 2 |
| 8-9 | 7 | 3 |
| 10-11 | 7 | 4 |
| 12-15 | 8 | 5 |
| 16-18 | 10 | 6 |
| 19-25 | 10 | 7 |
| 26-27 | 10 | 8 |
| 28 | 11 | 9 |
| 29-31 | 11 | 10 |
| 32-35 | 11 | 11 |
| 36-37 | 11 | 12 |
| 38-39 | 11 | 13 |
| 40-41 | 11 | 14 |
| 42 | 11 | 15 |
| 43 | 11 | 16 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| செயற்பாட்டு அட்டவணை | | பக்க இல. |
|---|---|---|
| 1. | தரம் 7 | 1-3 |
| 2. | தரம் 7 | 4-7 |
| 3. | தரம் 7 | 8-9 |
| 4. | தரம் 7 | 10-11 |
| 5. | தரம் 8 | 12-15 |
| 6. | தரம் 10 | 16-18 |
| 7. | தரம் 10 | 19-25 |
| 8. | தரம் 10 | 26-27 |
| 9. | தரம் 11 | 28 |
| 10. | தரம் 11 | 29-31 |
| 11. | தரம் 11 | 32-35 |
| 12. | தரம் 11 | 36-37 |
| 13. | தரம் 11 | 38-39 |
| 14. | தரம் 11 | 40-41 |
| 15. | தரம் 11 | 42 |
| 16. | தரம் 11 | 43 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் செயற்பாட்டுப் பத்திரம்

பாடம் : சமூகக் கல்வியும் வரலாறும்
தரம : 07
அலகு : எமது பாடசாலை
விடயம் : பாடசாலையிலிருந்து சமூகத்திற்கான செய்தி

கண்ணிவெடி.......
அசையாது நில்லுங்கள்...........
உதவி கேட்டு அழையுங்கள்.............

பேரழிவு விளைவிக்கக்கூடிய ஆயுதமாகக் கருதப்படும் கண்ணிவெடிகளினால் பெறுமதி மிக்க உயிர்கள் அழிவுக்குள்ளாகின்றன. இதன் அனர்த்தங்களினால் பாதிக்கப்படுவோரில் 30-40 வீதமானோர் 15 வயதுக்கும் குறைவான சிறார்கள் என்பது மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும். கண்ணிவெடி அனர்த்தங்களினால் இறப்போரினதும், அங்கவீனமாவோரினதும் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. உலகில் இன்று ஒவ்வொரு 22 நிமிடங்களுக்கும் ஒருவர் கண்ணிவெடி பாதிப்பினால் இறப்பிற்கோ, அங்கவீனத்திற்கோ உள்ளாகின்றார். அதேசமயம் கண்ணிவெடி ஒன்றின் உற்பத்திக்கு மூன்று அமெரிக்க டொலர்கள் செலவாவதுடன், அவற்றில் புதைக்கப்பட்டுள்ள ஒன்றினை அகற்றுவதற்கு 1000 அமெரிக்க டொலர்கள் செலவாகின்றது.


கண்ணிவெடி அனர்த்தங்களின் காரணமாக ஏற்படும் உடல், உள, சூழல் மற்றும் பொருளாதார ரீதியான இழப்புகள் ஏராளமாகும். இவ்வாறான அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காக சமூகத்திற்கு அறிவூட்டுவது காலத்தின் தேவையாக உள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் பாடசாலைகளின் பங்கு மிக மகத்தானது.

## செயற்பாடு-I

கண்ணிவெடிகளிலிருந்து பாதுகாப்புப் பெறல் என்ற கருப்பொருளின் கீழ் கண்ணிவெடியினைக் காண நேரிடும் பாடசாலை மாணவன் ஒருவன் பின்பற்றவேண்டிய சரியான செயன்முறைகளை அறிவூட்டுவதற்காக யுனிசெப் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட 10 புகைப்படங்கள் ஒழுங்கற்ற முறையில் இங்கு தரப்பட்டுள்ளன. அவற்றினை நன்கு அவதானித்துச் சரியான ஒழுங்கிற்கேற்ப இலக்கமிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு- **II**

உங்கள் பெற்றோர், அயலவர்கள் தமது அன்றாட நடவடிக்கைகளின் போது (விறகு வெட்டல், வயல் வேலை போன்ற) கண்ணிவெடி அனர்த்தங்கள் நிகழும் இடங்களினூடாக பயணம் செய்யவேண்டி ஏற்படும்போது கண்ணிவெடியைக் காண நேரிட்டால் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுவது எமது கடமையாகும்.

- அதற்காக நீர் மேலே அவதானித்த படங்களின் மூலமாக சமூகத்திற்கு வழங்கக்கூடிய செய்திகள் சிலவற்றை எழுதுக.
- அப்படங்களை ஒழுங்கான முறையில் பிறிஸ்டல் போட் ஒன்றில் ஒட்டிக் காட்சிப்படுத்தும் வகையில் தயாரிக்குக.
- கண்ணிவெடி அனர்த்தங்கள் தொடர்பாக சமூகத்திற்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகளில் ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் சேகரிக்கப்பட்ட செய்திகள், படங்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்தி சமூகத்திற்கு அறிவூட்டுக.
- ஏதேனும் ஒரு செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒருவர் கண்ணிவெடியினைக் காண நேரிடுவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அப்போது அவர் அவ்விடத்தை விட்டு அகலுமுன் அவ்விடம் ஆபத்து விளைவிக்கக்கூடிய இடம் என்பதனை மற்றவருக்குத் தெரிவிப்பது அவரது கடமையாகும். அதற்காக அவர் உடனடியாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் சிலவற்றைத் தயாரித்து சமூகத்திற்கு அறிவூட்டும் ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை முன்வைக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் செயற்பாடு

| | | |
|---|---|---|
| பாடம் | : | சமூகக் கல்வியும் வரலாறும் |
| தரம் | : | 7 |
| அலகு | : | எமது பாடசாலை |
| விடயம் | : | பாடசாலையில் இருந்து சமூகத்திற்கான செய்தி |

## எம்மைப் பற்றிச் சிந்தியுங்கள்

பலப் பரீட்சையின் காரணமாக மனிதன் தனது இனத்தினை அழிப்பதற்காக ஏராளமான ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகின்றான். இவற்றில் கண்ணிவெடியும் ஒன்றாகும். இதற்குக் குறித்த இடமோ நேரமோ இல்லை. மனிதன் எதிரிகளை அழிப்பதற்காகப் பயன்படுத்தும் இவ்வாயுதம் தனது நண்பர்களையும் பிற அப்பாவி மக்களையும் அழித்து விடுகின்றது.


கண்ணி வெடியால் நாளுக்கு நாள் அழிவுக்கு
உட்படுவது மனிதன் மாத்திரமன்று!


இந்நிலம் மனிதனுக்கு மட்டும்தானா? கண்ணுக்குப் புலப்படாத சிறு உயிரினம் தொட்டுப் பெரிய உயிரினம் வரை புவியில் வாழ்வதற்கு உரிமை உண்டு. அதனால் மனிதருக்கிடையிலான பலப்பரீட்சையில் பயன்படுத்தப்படும் கண்ணி வெடிகளால் ஏதுமறியா விலங்கினங்கள் அழிவுக்குள்ளாவதைத் தவிர்த்துக் கொள்வது பற்றிக் கவனத்திற் கொள்வது அவசியம்.

கண்ணிவெடியில் பாதிப்படைந்த சில ஜீவராசிகளின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலான கவிதைகளும் படங்களும் கீழே தரப்பட்டுள்ளன. இவை கண்ணிவெடியில் பாதிப்பு அடைந்த உயிரினங்கள் தமது கோரிக்கைகளை மனுவாக உரியவர்களிடம் சமர்ப்பிப்பதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு-1

- படத்திற் காட்டப்பட்டுள்ள மிருகங்களுக்கு ஏற்பட்ட அனர்த்தங்களைப் பட்டியற்படுத்துக.
- இந்த மிருகங்களுக்கு ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு பொறுப்பானவர்கள் யார் என நீர் கருதுகின்றீர்?
- இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு பாடசாலை மாணவன் என்ற வகையில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என நீர் கருதுகின்றீர்?

செயற்பாடு-2

- தங்கள் பாடசாலையில் ஒழுங்குசெய்யப்பட்ட சமூக அறிவூட்டல் நிகழ்வில் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டக்கூடிய செய்திகளை மேற்படி படங்களிலிருந்து தயாரிக்குக.

செயற்பாடு-3

அனர்த்தங்களுக்குள்ளாக்கப்பட்ட மிருகங்களினால் தமது பிரதேசங்களில் உள்ள இராணுவக் கட்டளையிடும் அதிகாரியிடம் தமது சோகத்தை வெளிப்படுத்தும் வகையில் நாடகம் ஒன்றினை நடித்துக்காட்டுக.(மேற்படி படங்கள், பாடல்களுடன் தங்களது ஆக்கங்களையும் இதில் சேர்த்துக்கொள்க.)

செயற்பாடு-4

இராணுவ கட்டளையிடும் அதிகாரி மிருகங்களுக்குச் சொல்லும் பதிலை கதையாக எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : சமூகக்கல்வியும் வரலாறும்

தரம் : 07

அலகு : 7.1 எமது பாடசாலை

உப அலகு : 7.1.3 பாடசாலை சமூகம்

விடயம் : பாடசாலை சமூகத்திற்கு வழங்கும் செய்தி

## அனர்த்தங்களிலிருந்து கவனமாயிருப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு-01

மேலே காட்டப்பட்டுள்ள படங்களை அவதானிக்கவும்.
அப்படங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் நிகழ்வின் சுருக்கத்தை எழுதிக்காட்டுக.

..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

செயற்பாடு-02

மேற்கண்ட படங்களையும், நீர் எழுதிய விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு சமூகத்துக்கு உம்மால் வழங்கக்கூடிய செய்திகள் சிலவற்றைக் கீழே எழுதுக.

1. ..............................................................................................................................
2. ..............................................................................................................................
3. ..............................................................................................................................
4. ..............................................................................................................................

செயற்பாடு-03

மேலே உம்மால் கூறப்பட்டுள்ள செய்திகளைப் பாடசாலைச் சூழலில் காட்சிப்படுத்துக.

செயற்பாடு-04



மேலே படத்தில் காட்டப்பட்டுள்ள பொருள் போன்ற சந்தேகத்துக்கிடமான பொருட்களை எங்காவது ஓரிடத்தில் கண்டால் நீர் செய்யக்கூடியவற்றை ஒழுங்குமுறைப்படி செய்துகாட்டுக.

1..............................................................................................................................
2..............................................................................................................................
3..............................................................................................................................
4..............................................................................................................................
5..............................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் செயற்பாடு

| | | |
|---|---|---|
| பாடம் | : | சமூகக்கல்வியும் வரலாறும் |
| தரம் | : | 7 |
| உபஅலகு | : | 7.1.3 பாடசாலையும் சமூகமும் |
| நிகழ்வு | : | வருடாந்த பெற்றோர் தினவிழா |
| செயற்பாடு | : | நடித்துக்காட்டுதல், "பாதையறிந்து சென்றிடுவோம், அனர்த்தங்களை தவிர்த்திடுவோம்" இரண்டு பாத்திரங்கள் சம்பந்தப்படுகின்றன. |

- பாத்திரம் -1: சங்கர்
  பாத்திரம் -2: நவாஸ்
- பாத்திரம்-1 சங்கர் பத்து வருடங்களுக்குப் பின்னர் வெளிநாட்டிலிருந்து சொந்த நாட்டுக்கு வருகின்றார்.
- பாத்திரம்-1 சங்கரும் பாத்திரம்-2 நவாசும் சந்திக்கின்றனர்

சங்கர்: தனது சொந்தப் பிரதேசத்தைப் பார்ப்பதற்காகப் புறப்படுகின்றான். அவ்வேளையில் நவாஸ் கூறுகின்றான்.

நவாஸ்: "இப்ப நீர் எங்க போக அவசரப்படுகின்றீர்?"

சங்கர்: எவ்வளவு காலத்துக்குப் பின்னர் வந்திருக்கின்றேன். என்ர பாட்டியைப் பார்ப்பதற்கு ஆசையாக இருக்கிறது.

நவாஸ்: நானும் வருகின்றேன், இருவரும் சேர்ந்து போவோம்.

சங்கர்: சரி வா போவோம்.
(இருவரும் சற்றுத்தூரம் சென்ற பின்னர் குறுக்கு வழியொன்றைக் காணுகின்றனர். சங்கர் அதனூடாகச் செல்வதற்கு முயற்சிக்கின்றான்)

நவாஸ்: ஐயோ! இந்தப் பாதையால் செல்லமுடியாது.

சங்கர்: ஏன்? போக முடியாது? இது என்ன குறியீடு?

நவாஸ்: இது கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள பிரதேசத்தைக் காட்டும் குறியீடாகும். இதனால் பிரயாணம் செய்வது ஆபத்தானது.

சங்கர்: இது என்னடா கண்ணிவெடி?

நவாஸ்: சாதாரண நிலப்பரப்பில் பொதுவாகக் கண்ணுக்குத் தெரியாத வகையில் மறைத்துவைக்கப்பட்டிருக்கும் அபாயகரமான வெடிக்கும் பொருள்.

சங்கர்: அது சரி, கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள இடங்களை எப்படியப்பா வேறுபடுத்திக் காணலாம்.

நவாஸ்: கைவிடப்பட்ட முகாம்கள், வயல்நிலங்கள், புற்றரைகள் போன்றன.

சங்கர்: நல்லகாலம், நீ என்னுடன் கூடவந்தது. இதைவிட வேறு ஏதாவது, குறிகாட்டிகள் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாஸ்: - மண்டை ஓடும் அதற்குக் குறுக்காகக் காட்டப்படும் எலும்புத்துண்டுகளும்.
- சிவப்பு வெள்ளை வர்ணம் பூசப்பட்ட கல்
- சிவப்பு மஞ்சள் நாடா.
- அபாயம் நிறைந்த பகுதிகளைச் சுற்றிப் பட்டி / கயிறு / கொடி ஆகியவற்றினால் எல்லையிடப்பட்டிருத்தல்.
- நிலத்தில் நிறம் தீட்டப்பட்ட (சிவப்பு, மஞ்சள், நீலம், வெள்ளை) தடிகள் நடப்பட்டிருத்தல்.
- மரங்களில் கட்டப்பட்டிருக்கும் சிவப்பு நிறத்துணிகள்

* இந்த நடித்துக் காட்டல் முடிந்த பின் பின்வரும் சுலோகங்களை ஏந்திய வண்ணம் மாணவர்கள் சிலர் காட்சி தருவார்கள்.

அபாயக் குறியீடுகளை
உதாசீனம் செய்வது
ஆபத்தை விளைவிக்கும்!

அபாயக் குறியீடுகளை
அலட்சியம் செய்வது
அங்கங்களை இழப்பதற்கு
காரணமாக அமையும்!!

அபாயக் குறியீடுகளைப்
பாதுகாப்பதனால் நீங்களும்
உங்கள் சமூகமும்
நன்மையடைவீர்கள்!

அபாயக் குறியீடுகளைப்
பாதுகாப்பது சமூகத்தின்
தார்மீகக் கடமையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடம் : சமூகக்கல்வியும் வரலாறும்

அலகு : 8.3 ஏனைய ஆசிய நாடுகள்

தரம் : 8

விடயம் : கண்ணிவெடி அனர்த்தங்களினால் பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகள்

கருப்பொருள் : கண்ணிவெடியினால் உலகமெங்கும் பிரச்சினை



தற்போது காணப்படும் கண்ணிவெடி நெருக்கடி உலகளாவிய பிரச்சினையாக மாறியுள்ளது. இலங்கையில் கண்ணி வெடி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பல மாவட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை போன்ற மாவட்டங்களில் பெருந்தொகையான கண்ணிவெடிகளும் அனுராதபுரம், பொலனறுவை, அம்பாறை, புத்தளம் போன்ற மாவட்டங்களில் சிறு அளவிலும் இந்நெருக்கடி காணப்படுகிறது.

உலக ரீதியாகப் பார்க்கும் போது இந் நெருக்கடி 80க்கும் அதிகமான நாடுகளில் காணப்படுகிறது.

மொசாம்பிக், வியட்னாம், றுவாண்டா, அங்கோலா, சைபீரியா, புறூண்டி, எதியோப்பியா, பாக்கினோபசோ, ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான், குவைத், லெபனான், பர்மா, சிரியா, கொசோவோ, கேர்சிகோவினா, பொஸ்னியா, போன்ற நாடுகள் அவற்றுள் சிலவாகும்.

கண்ணிவெடி அனர்த்தங்கள் காரணமாக யுத்தங்களில் ஈடுபடுவோர் மட்டுமன்றி அப்பாவி மக்களும் பலியாவது மிகவும் மனவேதனைக்குரியதாகும். அவர்களின் அறியாமையும் கவலையீனமுமே இதற்குக் காரணமாகும்.

மேற்கண்ட தொலைக்காட்சிச் செய்தியினைப் பார்த்த மீனா, சரோஜினி ஆகியோருக்கிடையில் பின்வரும் உரையாடல் ஒன்று இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மீனா சரோஜினிக்குக் கூறிய ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்களும் இணைந்து கொள்ளுங்கள். அதற்காகக் கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுக.

## செயற்பாடு-I

மேற்கண்ட செய்தியினை வாசித்து உலகில் கண்ணிவெடிப் பிரச்சினை காணப்படும் நாடுகளை பின்வரும் அட்டவணையில் எழுதுக.

| தென்னாசிய நாடுகள் | மத்திய கிழக்கு நாடுகள் | தென்கிழக்காசிய நாடுகள் | ஆபிரிக்க நாடுகள் | ஏனைய நாடுகள் |
|---|---|---|---|---|
| | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு- II

மேலே எடுத்துக்காட்டப்பட்ட கண்ணிவெடிப் பிரச்சினைகள் உள்ள நாடுகளை உலகப் புற உருவப்பட மொன்றில் குறித்துப் பெயரிடுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு- III

உலகின் பல நாடுகளிலும் காணப்படும் கண்ணிவெடிப் பிரச்சினை தொடர்பாக மக்களை அறிவூட்டுவதற்காகச் சுவரொட்டிகளைத் தயாரிக்குக. கீழ்வரும் தலைப்புக்களை அதற்குப் பயன்படுத்துக.

- கண்ணிவெடிகளை இனங்காணல்.
- கண்ணிவெடிகளைத் தவிர்ப்போம்.
- கண்ணிவெடிகளால் ஏற்படும் இழப்புகளைத் தவிர்ப்பதன் முக்கியத்துவம்.
- உங்களால் தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகளைப் பாடசாலையைச் சூழவுள்ள பகுதிகளில் காட்சிப்படுத்துக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் செயற்பாடு

| | | |
|---|---|---|
| பாடம் | : | சமூகக்கல்வியும் வரலாறும் |
| தரம் | : | 10 |
| செயற்பாடு | : | 10.06 |
| அலகு | : | அபிவிருத்தி |
| விடயம் | : | இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கையில் கண்ணிவெடி அனர்த்தங்களினால் ஏற்படும் பிரச்சினைகள். |

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் கண்ணிவெடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலாவும் சீதாவும் கண்ணிவெடி அனர்த்தம் தொடர்பாக ஒலிபரப்பப்பட்ட வானொலி கலந்துரையாடல் ஒன்றினைச் செவிமடுத்தபோது அங்கு முன்வைக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- கண்ணிவெடி காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள் அண்மைக்கால அபிவிருத்தி நடவடிக்கைகளில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக உள்ளன.
- வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டும் தற்போது புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளின் அளவு ஒரு மில்லியனுக்கும் அதிகமாகும் என்பது அபிவிருத்திக்கு ஏற்படுத்தும் ஒரு தடையாக உள்ளது.
- கண்ணிவெடி, மற்றும் வெடிக்காத வெடிநிலையில் உள்ள வெடிபொருள் (UXO) காரணமாக ஏற்படும் அனர்த்தங்களினால் உடல் ஆரோக்கியம் உள்ள நபர் ஒருவரை அங்கவீனர் ஆக்கிவிடுகின்றது.
- கண்ணிவெடி அனர்த்தங்களுக்கு உட்படும் பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது வீடு வாசல்களை இழப்பதற்கும் விட்டுப்போவதற்கும் காரணமாகின்றது.
- கண்ணிவெடி அனர்த்தங்களின் காரணமாக இடம்பெயர்ந்துள்ள அகதிகளுக்கு நிவாரணங்கள் வழங்குவது அபிவிருத்திச் செயல்முறைக்குத் தாக்கத்தினை விளைவிக்கின்றது.
- கண்ணிவெடி காரணமாக அங்கவீனமானவர்களுக்குச் சுகாதார, மருத்துவச் சேவை, வழங்குவதில் பெருந்தொகையான பணம் செலவிடப்படுகின்றது.
- கண்ணிவெடி ஒன்றினை உற்பத்தி செய்வதற்கு மூன்று அமெரிக்க டொலர் செலவாகின்றது. அதனை அகற்றுவதற்கு ஆயிரம் அமெரிக்க டொலர் செலவாகின்றது. இந்நிலையானது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.
- கண்ணிவெடி அகற்றுதல், அங்கவீனர்களுக்கு சுகாதார மருத்துவ சேவைகளை வழங்குதல், அகதிகளுக்கு நிவாரணம் வழங்குதல் ஆகிய செலவீனங்களை மிகுதிப்படுத்தினால் அது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குப் பெருந்துணை புரியும்.
- கண்ணிவெடிகளால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் பௌதீக வளங்கள் அழிவுக்கும், சூழல் மாசடைவதற்கும் உயிர் பல்லினத்தன்மை அழிவதற்கும் அச்சுறுத்தலாக விளங்குகின்றது.
- கண்ணிவெடி அனர்த்தங்கள் மனிதனின் வாழும் உரிமையை மறுக்கின்றது.

செயற்பாடு-1

மேற்கண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் அபிவிருத்திக்கு இடையூறு விளைவிக்கும் காரணங்களை இனங்கண்டு அவற்றை இங்கு காட்டப்பட்டுள்ள அட்டவணையில் ஒவ்வொரு நிரலின் கீழும் குறிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிவெடி அனர்த்தங்களால் இலங்கை அபிவிருத்தி செயற்பாடுகளில் ஏற்படும் பிரச்சினை.

| பொருளாதாரப் பிரச்சினை | சமூகப் பிரச்சினை | உடல், உளப் பிரச்சினை | சுற்றாடல் பிரச்சினை |
|---|---|---|---|
| | | | |

## செயற்பாடு-11

அட்டவணையில் காட்டியுள்ள தகவல்களைக் காட்சிப்படுத்துவதற்குப் பொருத்தமான வகையில் கீழே தரப்பட்டுள்ள முறையைப் பயன்படுத்திக் காட்சிப்பலகை ஒன்றினைக் காட்சிப்படுத்துக.

முறை: ஓவியம் / கேலிச்சித்திரம் / கவிதை / வரைபடம் / தேசப்படம் / சுவரொட்டி / ஓவியக்கதை பந்தி / கோட்டு முறிவு வரைவு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் செயற்பாடு**

| | | |
|---|---|---|
| பாடம் | : | சமூகக்கல்வியும் வரலாறும் |
| தரம் | : | 10 |
| அலகு | : | அபிவிருத்தி |
| விடயம் | : | அங்கவீனர்களுக்குச் சுகாதார சேவைகளை மேம்படுத்துதல் |

**அங்கவீனமுற்றோருக்கு சுகாதார சேவைகளை வழங்கிடுவோம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிவெடி அனர்த்தங்களுக்கு உட்பட்டவர்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குவது தொடர்பாக சமூகத்தினை அறிவூட்டும் நடவடிக்கைகளுக்காக நடாத்தப்பட்ட புத்திஜீவிகளின் கலந்துரையாடலில் பங்குபற்றிய பல்வேறு நிபுணர்களின் கருத்துக்கள் பின்வருமாறு.

- **அறிவிப்பாளர்:**

அரசு கண்ணிவெடி அனார்த்தங்களினைத் தவிர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொள்ளும் அதேவேளை, கண்ணிவெடி அனர்த்தங்களினால் அங்கவீனமானவர்களிற்கு சுகாதார, மற்றும் நலன்புரி சேவைகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் கண்ணிவெடியினால் ஊனமுற்றவர்களுக்கு எம்மால் முடிந்த வரையில் உதவிசெய்வது எம்மனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

“புத்திஜீவிகளது கலந்துரையாடல்” என்ற இன்றைய நிகழ்ச்சியில் எமது அன்பான அழைப்பினை ஏற்று இங்கு வருகை தந்துள்ளவர்கள் இது தொடர்பான நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பல்துறை நிபுணர்களேயாவர். மேலும், இக்கூட்டத்துக்கு வருகைதந்துள்ள பிரதேசவாதிகளான உங்களையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

புத்திஜீவிகளின் கலந்துரையாடலுக்கு வந்திருக்கும் உங்களை, கண்ணிவெடி அனர்த்தங்களினால் அங்கவீனமானோர் தொடர்பாக உங்களால் வழங்கப்படும் சுகாதார மற்றும் நலன்புரி சேவைகள் பற்றி இங்கு கூடியுள்ள மக்களுக்கு விளக்குமாறு வேண்டுகின்றேன். இங்கு வந்துள்ள உள்ளுர் மக்களுக்கு இது தொடர்பான உங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றேன்.

- **முதலுதவியாளர்**

நாம் முதலுதவி செய்வதில் சர்வதேச மட்டத்தில் பயிற்சிகளைப் பெற்றுள்ளோம். இதனால் கண்ணிவெடி அனர்த்தங்களுக்கு உட்படுவோருக்கு முதலுதவி வழங்குவதற்கு எந்த நேரத்திலும் நாம் தயாராகவுள்ளோம். நாம் மட்டுமல்ல பலர் இது தொடர்பாகச் சேவையாற்றுகின்றனர். இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் தாமதமின்றி எமக்கு அறிவியுங்கள். நாம் இருக்கும் இடங்கள் பற்றிய விடயங்களை கிளிநொச்சியிலுள்ள பிராந்திய கண்ணிவெடி செயற்பாட்டு அலுவலகம் மற்றும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள கண்ணிவெடி தொடர்பான மாவட்டச் செயற்பாட்டு நிலையம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

அதுபோன்று யாருமொருவர் கண்ணிவெடிக் காயத்துக்குட்பட்டால் எவ்வாறான நடவடிக்கைகளைச் செய்யலாம் என்பது பற்றி உங்களுக்கு இவ்விடத்தில் கூறுவது முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமொருவர் கண்ணிவெடியிருக்கும் பகுதியில் காயத்துக்குள்ளாகி விழுந்துகிடப்பதைக் கண்டால் உடனடியாக அவ்விடத்துக்குச் செல்லவேண்டாம். உதவிகேட்டு அழையுங்கள். உடனடியாகச் சென்று, கண்ணிவெடி அகற்றும் குழுவினரை அவ்விடத்துக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.

அவர்களின் உதவியுடன் காயத்துக்குள்ளானவரை பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் சென்று, ஏற்பட்ட காயம் பற்றிப் பரிசோதித்துப் பாருங்கள். இரத்தம் கூடுதலாக வெளியேறுவதைத் தடுப்பதற்காக சுத்தமான துணியினால் காயத்துக்குக் கட்டுப்போடுங்கள். எச்சந்தர்ப்பத்திலும் நீராகாரம் வழங்கக்கூடாது.

காற்று, மழை என்பனவற்றிலிருந்து பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச்சென்று அவருக்கு உளரீதியான அமைதியினை ஏற்படுத்துங்கள்.

நீங்கள் வைத்தியராக இல்லாவிட்டால் அவரின் காயத்தினைச் சுத்தப்படுத்துவதையும், சிகிச்சை அளிப்பதையும், தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உடனடியாக அண்மையிலுள்ள வைத்தியருள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள்.

- **வைத்திய நிபுணர்**

கண்ணிவெடி அனர்த்தங்களுக்கு யாருமொருவர் உட்பட்டால் அவரை உடனடியாக எம்மிடம் கொண்டுவருமாறு உங்களை வேண்டிக் கொள்கின்றேன். எப்பொழுதும் எந்த வேளையிலும் அவருக்கு முதலிடம் கொடுத்து சிகிச்சை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம். வைத்தியசாலையிலுள்ள மருத்துவர், தாதிமார் குழுவினரது உதவியினைப் பெற்று அறுவைச் சிகிச்சைகளை மிகக் கவனமாகச் செய்தல் வேண்டும்.

இத்தகைய அனர்த்தங்களுக்கு உட்பட்டோருக்கு நலன்புரி சேவைகளை வழங்குவது உங்களது கடமையாகும்.

**தாதி:**

கண்ணிவெடி அனர்த்தத்துக்குட்பட்டவருக்கு அறுவைச் சிகிச்சை வழங்கிய பின்னர் வைத்தியசாலை வாட்டுக்குக் கொண்டுவந்து அதிலிருந்து அவருக்கு நாம் பரந்தளவிலான சேவைகளை வழங்க நேரிடும்.

- உரிய நேரத்துக்கு மருந்தும் ஊசிமருந்தும் வழங்கல்.
- நோயாளிக்குத் தேவையான வசதிகளை அளித்தல்.
- அவருக்கு அன்பான கருணையுணர்வுடன் சேவை செய்து நோயாளியின் உளத்தாக்கத்தினைக் குறைத்து துரிதமாகக் குணமடையச் செய்தல்.
- அதே போல் நாம் அவருக்கு சரியான சுகாதார நடைமுறைகளைப் பழக்குவதும் எமது பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடமை நேரம் தவிர்ந்த நேரங்களில் கூட அவர்களுக்கு நாம் சேவை செய்யத் தயாராகவுள்ளோம்.

அதேபோல் அவர்கள் சாதாரண வாழ்க்கைக்கு மீண்டும் வருவதற்காக அவர்களின் மன உறுதியினைக் கட்டியெழுப்புவதும் நோயாளி சுகம் அடைவதற்கு மேலும் உதவிகள் வழங்குவதும் அவசியமாகும். குடும்பத்திலுள்ளவர்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துவதும் அத்துடன் அவரை உற்சாக மூட்டுவதும் அவசியமாகின்றது.

- **உடலியற் சிகிச்சையாளர் / பிஸியோதிரோபிஸ்ற்**

அங்கவீனமுற்றோருக்கு உடல்ரீதியான பயிற்சிகளை வழங்குவது எனது கடமையாகும். கண்ணி வெடியினால் கை கால்களை இழந்தவருக்கு செயற்கை கை, கால்களை வழங்க வேண்டும். அவரின் உடல் அவயவங்களை சாதாரண நிலையில் இயங்கும் வகையில் தேவையான உடற்பயிற்சிகளைப் படிப்படியாக வழங்குவது எமது கடமையாகும். வைத்தியசாலையிலிருந்து வெளியேறுவதற்கு முன் நாம் இத்தகைய முதலுதவி உடற்பயிற்சிகளைப் பெற்றுத்தருவோம். வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்னர் குறிப்பிட்ட காலப் பகுதிக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் மேலதிக பயிற்சிகளைப் பெற எம்மிடம் வருவது அவசியமாகும்.

இத்தகைய நடவடிக்கைக்காக நாம் விசேட பயிற்சி பெற்றுள்ளோம். இதற்கென விசேட உபகரணங்களைப் பாவிக்கின்றோம். மிகச் சிறிய உடற்பயிற்சியிலிருந்து இங்கு பயிற்சியினை வழங்குகின்றோம். இவ்வாறான சேவைகளைப் புரிவது அங்கவீனர்களை மிகச் சீக்கிரமாக சாதாரண வாழ்விற்கு இட்டுச் செல்லும்.

- **மனோவியல்நிபுணர்**

பாதிப்படைந்தவருக்கும் அவரின் குடும்பத்துக்கும் தேவையான உளத்தேவைச் சிகிச்சையினை வழங்குவது எமது கடமையாகும். அவர்களின் உளத்துக்குத் தேவையான உதவிகளை நாம் வழங்க முற்படுகிறோம். விசேடமாக கண்ணிவெடிப் பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளில், அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களில் எம்மைப் போன்ற மனோவியல் நிபுணர்கள் கடமையாற்றுகின்றனர். அங்கவீனமானவர்களின் பல்வேறு திறமைகளை இனங்கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கான ஆலோசனையை வழங்குவது எமது பொறுப்பான கடமையாகும்.

- **சமூக சேவையாளர்**

எம்மால் கண்ணிவெடி அனர்த்தங்களுக்குள்ளானோர் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு சாதாரண வாழ்க்கையினைக் கொண்டு நடாத்துவதற்கு நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கின்றோம். அவர்கள் பாடசாலை, வேலைத்தளம், விளையாட்டுமைதானம் ஆகியவற்றுக்குச் செல்லத் தேவையான உடல், உளச் சக்திகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிக்கின்றோம். அவர்களின் திறமைகளை இனங்கண்டு அவர்கள் சமூகத்தில் வாழக்கூடிய வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை வடிவ மைப்பது எமது கடமையாகும். அதன் மூலம் சமூகத்தில் அவர்களை பயன்மிக்க நபர்க ளாக மாற்றுகின்றோம். அங்கவீனமானவர்களுக்குத் தேவையான உதவி மற்றும்நலன்புரி சேவை களைப் பெற்றுக் கொடுப்பதற்கு இயங்கும் நிலையங்கள் பற்றிய தகவல்களை கிளிநொச்சியில் உள்ள வெண்புறா செயற்கை உறுப்பு தொழினுட்ப நிறுவனம் மற்றும் வவுனியாவில் அமைந்துள்ள கண்ணிவெடி தொடர்பான மாவட்ட செயற்பாட்டு நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

- **கலந்துரையாடலில் பங்கு பற்றும் பாடசாலை ஆசிரியர்:**
  அங்கவீனமானவர்கள் தொடர்பாக சமூகத்தில் ஏற்படுத்த வேண்டிய மனப்பாங்குகள் பற்றி சில கருத்துக்களைக் கூறவே நான் எழுந்து நிற்கின்றேன். சிறப்பாக பாடசாலைகளில், வேலைத் தளங்களில், போகுமிடங்களில், விளையாடுமிடங்களில்:

  - அவர்கள் குறித்து அதிக அக்கறை காட்டவேண்டும்.
  - தேவையானவிடத்து அவர்களுக்கு உதவிடல் வேண்டும்.
  - அவர்களைக் கேலி செய்யக்கூடாது.
  - அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.
  - பொதுவாக அவர்களைச் சகல நடவடிக்கைகளிலும் இணைத்துக் கொள்ளல் வேண்டும்.
  - பஸ்சில் ஏறும் அங்கவீனர் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியது என்ன?
  - பாடசாலை வரும் அங்கவீனமடைந்த சகோதர, சகோதரிகளுக்கு நீங்கள் செய்யக் கூடியது என்ன?
  - உங்கள் அயலில் ஊனமுற்றவர்கள் இருப்பின் நீங்கள் அவர்களை எங்ஙனம் நடத்துவீர்கள்? என்பன பற்றி உங்கள் மனதில் சிந்தித்துப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு- 01**

மேலே காட்டப்பட்டுள்ள புத்திஜீவிகளின் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சிறு நாடகம் ஒன்றைத் தயாரித்து பெற்றோர் கூட்டமொன்றில் நடித்துக் காட்டுக.

**செயற்பாடு - 02** (1) கண்ணிவெடி அகற்றல்

**செயற்பாடு - 02** (2) கண்ணிவெடி அபாய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

**செயற்பாடு - 02** (3) கண்ணிவெடி அனர்த்தங்களுக்கு உட்பட்டவர்களுக்கு உதவி வழங்குதல்.

மேற்குறித்த நடவடிக்கைகளில் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், மற்றும் அவை வழங்கும் உதவிச் சேவைகள் தொடர்பான தவல்களைச் சேகரித்து பின்வரும் அட்டவணையினைப் பூரணப்படுத்துக. (கண்ணிவெடிச் செயற்பாட்டு அலுவலகங்களில் இத்தகைய தகவல்களைப் பெறமுடியும்.)

| நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் தன்மை அரசு /அரசசார்பற்ற | வழங்கும் உதவி / சேவை |
|---|---|---|
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. எமது பாடசாலையிலுள்ள நண்பன் அல்லது நண்பி கண்ணிவெடியினால் அங்கவீனமான நிலைக்கு உள்ளாகின்றார் என எண்ணிக்கொள்ளுங்கள்.

இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அவன் அல்லது அவள் தொடர்பாக நீர் செய்யக்கூடிய, செய்யக்கூடாத நடவடிக்கைகளைப் பின்வரும் அட்டவணையில் எழுதுக.

| செய்யக்கூடியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| | |

04. அங்கவீனமான பெண்ணொருவர் பஸ்ஸில் ஏற முற்படும்போது நீர் செய்யவேண்டிய உதவிகளை விபரிக்குக.

05. "கண்ணிவெடி அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறல்" என்ற தலைப்பின் கீழ் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய வகையில் சுவர்ப்பத்திரிகை ஒன்றினைத் தயாரிக்குக.

- பாதுகாப்பான, பாதுகாப்பற்ற இடங்களை அறிந்துகொள்ளும் முறை.
- அபாயக் குறிகாட்டிகள்
- கண்ணிவெடிகளின் அனர்த்தங்களுக்குட்பட்ட நபர்களுக்கு சேவைகள் செய்திடும் நிறுவனங்கள் பற்றிய விபரங்கள்.
- அவர்களுக்கு மருத்துவ நலன்புரிச் சேவைகளை வழங்கும் காட்சியினைச் சித்திரிக்கும் ஓவியம்.
  கண்ணிவெடியினால் பாதிக்கப்படுகின்ற இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகள் பற்றிய விபரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பாடம் | : | சமூகக் கல்வியும் வரலாறும் |
| தரம் | : | 10 |
| அலகு | : | 10.6 அபிவிருத்தி |
| உப அலகு | : | 10.6.5: இலங்கை மக்களின் வாழ்க்கை நலன்களை விருத்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள். |
| குறிக்கோள்கள் | : | கண்ணிவெடி காரணமாக அங்கவீனமான நபர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ள வேண்டிய நலன்புரிச் சேவைகள். |

செயற்பாட்டு முறை: **பிரச்சினை தீர்த்தல்**

## பரிதவித்து நிற்போர்க்கு உதவிக்கரம் நீட்டுவோம்

கண்ணன் ஒரு பாடசாலை மாணவன். அவனது குடும்பம் தாய், தந்தை உள்ளிட்ட ஐந்து சகோதரர்களைக் கொண்டதாகும். கண்ணனே குடும்பத்தில் மூத்தவன். குடும்பத்தின் சகல பொறுப்புக்களையும் தந்தையே கவனித்து வந்தார். கண்ணன் கல்வியில் மிக ஆர்வமுடையவனாகவும் கெட்டிக்காரனாகவும் விளங்கினான். அத்துடன் கிராமத்திலுள்ள வறிய மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் வழிகாட்டுவதிலும் விருப்பமுடையவனாக இருந்தான். அவன் பாடசாலைக்கு ஒரு நாளேனும் தவறாமல் செல்லும் வழக்கமுடையவன்.

கடந்த சில நாட்களாக அவனது பாடசாலை வருகை ஒழுங்கற்றதாக இருந்தது. மேலும் கல்வியில் முன்னரைவிட ஆர்வம் குறைந்தும் சோர்வுடனும் காணப்பட்டான்.

இவற்றைக் கண்ணுற்ற அவனது வகுப்பு மாணவர்கள் இதுபற்றி வினவத் தொடங்கினர். அப்போது கண்ணனின் தந்தை கண்ணிவெடியில் அகப்பட்டுக் காலை இழந்த துக்ககரமான செய்தி தெரியவந்தது. அத்துடன் கண்ணனே வீட்டுப் பொறுப்புக்களையும் ஏற்கவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டிருந்தான்.

இச் சம்பவத்தை விளங்கிக்கொண்ட வகுப்பு மாணவர்கள் வகுப்பாசிரியரிடம் சென்று விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

இதைக் கேட்டுக் கவலையடைந்த வகுப்பாசிரியர் கண்ணனை அழைத்து அவனுக்கும் அவனது குடும்பத்திற்கும் ஆறுதல் கூறியதுடன் அதிபரின் கவனத்திற்கும் கொண்டு வந்தார்.

அத்துடன் வகுப்பு மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கப் பாடசாலையின் சிற்றுண்டிச்சாலையைக் கண்ணனின் தந்தையார் நடாத்துவதற்கும் அதிபரின் அனுமதியைப் பெற்று வகுப்பு மாணவர் களிடமிருந்து சிறு சிறு தொகைப் பணத்தைப் பெற்றுக்கொடுத்து சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கு வழிகாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் நகர்ந்த பின்னர் கண்ணன் கல்வியில் ஊக்கம் செலுத்த ஆரம்பித்ததுடன் கிராமத்திலுள்ள வறிய மக்களுக்கான செயற்பாடுகளையும் விருப்போடு தொடர்ந்தான்.

செயற்பாடு:

1. கண்ணன் தனது பாடசாலைக் கல்வியை தொடர்வதற்கு தடையாக இருந்த காரணம் யாது?

   ..........................................................................................................................

   ..........................................................................................................................

   ..........................................................................................................................

2. கண்ணன் தனது பாடசாலைக் கல்வியை தொடர்வதற்கு அவனது வகுப்பு மாணவர்கள் செய்த முயற்சிகள் எவை?

   ..........................................................................................................................

   ..........................................................................................................................

3. கண்ணனின் தந்தை வாழ்க்கையைத் தொடர்ந்து நடாத்துவதற்கு நீர் கூறும் யோசனை யாது?

   ..........................................................................................................................

   ..........................................................................................................................

   ..........................................................................................................................

4. இச்சந்தர்ப்பத்தில் கண்ணனின் வகுப்பு மாணவர்கள் ஒன்றாக இணைந்ததற்கான காரணங்கள் மூன்று தருக.

   ..........................................................................................................................

   ..........................................................................................................................

   ..........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுயகற்றல் மாணவர் செயற் பத்திரம்**

**சம்பவக் கற்கை**

பாடம் : சமூகக்கல்வியும் வரலாறும்

தரம் : 10

அலகு : 10.6 அபிவிருத்தி

உபஅலகு : 10.6.4. இலங்கையின் அபிவிருத்திச் செயல் ஒழுங்கில் எழும் பிரச்சினைகள்

விடயம் : கண்ணிவெடிகளால் ஏற்படக்கூடிய இழப்புக்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்.

கீழே தரப்பட்டுள்ள சம்பவமானது ஒரு பத்திரிகையில் வெளிவந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டதாகும். தரப்பட்ட விடயத்தை வாசித்து விளங்கி அதன் கீழ் உள்ள செயற்பாடுகளைச் செய்க.

## அபிவிருத்தியை நோக்கி

அமைதி வாழ்வு வாழ்ந்த மட்டூர் கிராம மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல வருடங்களாக அவல வாழ்வு வாழ்ந்து வரும் காலத்தில் யுத்தம் தணிந்து தம் சொந்த இடம் செல்லலாம் என அறிந்ததும் தம் ஊர் விரைகின்றனர். சிதைந்து சுடுகாடுபோல் விளங்கும் வாழிடஙகளைக் கண்டு அவ்வாழிடங்களைத் திருத்தி வசிக்க முயற்சிக்கின்றனர். அக்காலங்களில் தம் பிரதேசத்தில் கண்ணிவெடி அனர்த்தங்களால் அங்கவீனராகும் சம்பவங்கள் இடம்பெறுவதைக் கேள்வியுறுகின்றனர். பொருளாதார மையங்களாக விளங்கிய பயிர்ச்செய்கை நிலங்கள் மிதிவெடிப் பிரதேசங்களாக மாறிவிட்டதனால் மக்கள் தமது சீவனோபாயத் தொழில்களை மேற்கொள்ளமுடியாது அரச நிவாரணத்தையும் உதவிகளையும் நம்பி வாழ்கின்றனர். வறுமை, களவு, கொள்ளை போன்ற சமூகச் சீரழிவும் காணப்படுகின்றன. இதன் காரணமாக தடைப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சிகளினை அவ்வூர் மக்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளனர்.

**செயற்பாடு**

1. மேலே எடுத்துக்காட்டப்பட்ட சம்பவத்திலிருந்து மட்டூர் மக்கள் எதிர்நோக்கிய சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் யாவை என எழுதுக.
2. நீங்கள் இனங்கண்ட பிரச்சினைகள் நாட்டின் அபிவிருத்தியில் தாக்கம் செலுத்தும் முறைகள் குறித்து பத்திரிகை ஒன்றிற்கு எழுதக்கூடிய கட்டுரை ஒன்றை எழுதுக.
3. மட்டூர் கிராம மக்களிடம் ஏற்பட்டுள்ள சீரழிவு நீங்கி மனித விழுமியங்கள் மேம்படுவதற்கு உம்மால் கூறக்கூடிய ஆலோசனைகளைக் கூறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பாடம் | : | **சமூகக்கல்வியும் வரலாறும்** |
| தரம் | : | 11 |
| அலகு | : | 11.3 சமகாலப் பிரச்சினை |
| விடயம் | : | கண்ணிவெடி அனர்த்தங்களினால் குடும்ப அலகு ஒன்று எதிர்நோக்கும் சவால்கள் |
| | | காலை இழந்தாலும் நடந்திடுவேன் வெற்றிப்பாதையில் |

மீனவராகிய ராஜூ வழமைபோல் அன்றும் வேலைக்குப் புறப்பட்டுச் செல்கையில் குறுக்குப் பாதையை நாடியவேளை கண்ணிவெடி அனர்த்தத்திற்கு உள்ளாகின்றார். சில காலம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபின் வீடு திரும்புகையில் அவரது ஒரு கால் துண்டிக்கப்பட்டிருந்தது. அவரைப் பார்வையிட வந்த அயலவர் ஒருவருக்கும் ராஜூ குடும்பத்தவர்களுக்கும் இடையேயான சம்பாசணை கீழே தரப்பட்டுள்ளது. அதனை நன்கு வாசிக்கவும்.

ராஜூ - குடும்பத் தலைவர்
முத்து - அயலவர்
கமலினி - ராஜூவின் மனைவி

முத்து : இப்போ காயம் எப்படி? ஆறிவிட்டதா தம்பி?

ராஜூ : கொஞ்சம் சுகம் அண்ணை. ஆனால் இப்படி இருப்பதைவிட அன்றே செத்திருக்கலாம் அண்ணை.

கமலினி : ஐயோ! என்ர கடவுளே! அப்படி நினைக்க வேண்டாம். கால் ஒன்று இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நீங்கள் உயிரோடு வாழவேண்டும்.

முத்து : அதுசரி கால் ஒன்று இல்லாவிட்டாலும் உன்னுடைய உயிர் தப்பினது பெரும் காரியம் தம்பி.

ராஜூ : இப்படியே, ஏன் உயிர் வாழவேண்டும்? என்னுடைய பிள்ளைகள் இரண்டையும் மனைவியையும் நினைக்க பெரும் கவலையாய் இருக்கு.

கமலினி : அப்படி நீங்கள் நினைக்க வேண்டாம். கூலி வேலை செய்தாவது உங்கள் அனைவரையும் காப்பாற்ற என்னால் முடியும்.

முத்து : பாரடா தம்பி கமலினியின்ரை தைரியத்தை. இனி நீ கமலினிக்கு முடியுமானளவு உதவி செய்தம்பி.

முத்து, கமலினி ஆகியோருடனான இச்சம்பாசணையின் பின் எதிர்கால சவால்களுக்கு எப்படி முகங்கொடுக்க முடியுமென ராஜூ சிந்திக்கத் தொடங்கினான். அப்போது மனதில் எழுந்த எண்ணங்கள் கீழே தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(ராஜு தனக்குள் இவ்வாறு சிந்தித்தபின்)

ராஜு : கமலினி! உனக்கு முடியும் தானே? என்னை படகில் இருத்தித் தள்ளிவிட.

கமலினி : ம்..... எனக்கு முடியும். ஆனால்...... எப்படி நீங்கள் மட்டும் கடலுக்குச் செல்வீர்கள்?

ராஜு : ரவி எனக்கு உதவி செய்யலாம்தானே.

(ராஜு அயலவர் உதவியுடன் தனக்கு வழமையான தொழிலைத் தொடர்ந்து செய்தான். இப்போது ராஜு ஊனமுற்ற நிலையில் பிரச்சினையாக இல்லை.)

மேற்கண்ட உரையாடலினை நன்கு வாசித்தறிந்து கீழே தரப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு - 1

அங்கவீன நிலையிலும் குடும்பமட்டத்தில் தனக்கு ஏற்பட்ட சவால்களை வெற்றிகொள்ள ராஜுவிற்கு உதவிய பின்னணி நிலமைகள் பற்றி குறிப்பிடுக.

செயற்பாடு - 2

(1) கண்ணிவெடி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் வாழும் குடும்பங்களிற்கு ஏற்படும் சவால்கள் எவ்வாறானவை என்பது பற்றிக் குறிப்பிடுக

(2) கண்ணிவெடி அனர்த்தத்தால் ஊனமுற்ற நபர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக பாடசாலை மாணவர் என்ற வகையில் உம்மால் மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகள் சிலவற்றைப் பிரேரிக்குக.

செயற்பாடு - 3

கண்ணிவெடி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்ப அலகிற்கு உதவி வழங்கலுக்காக உம்மால் மேற்கொள்ளக்கூடிய செயற்றிட்டம் ஒன்றினைத் தயாரித்து முன்வைக்குக.

குழுச் செயற்பாடுகள் பொருத்தமான நேரத்தில் மேற்கண்ட செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : **சமூகக்கல்வியும் வரலாறும்**
தரம் : 11
அலகு : சனநாயகம்
விடயம் : மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்

## எமது உரிமைகள்

கோபாலன் என்பவன் கண்ணிவெடி அனர்த்தங்கள், மற்றும் மனித உரிமைகள் என்ற தலைப்பின் கீழ் சஞ்சிகை ஒன்றுக்கு எழுதிய ஆக்கம் ஒன்றின்பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

எமது நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. தற்காலத்தில் பொரும்பாலான நாடுகளில் இச் சுதந்திரத்திற்கு தடைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களை அடிக்கடி கேள்வியுறுவது மனவேதனைக்குரிய விடயமாகும்.


அண்மைக்காலமாக உலகில் பல நாடுகளில் இடம்பெறும் யுத்தங்களில் பயன்படுத்தப்படும் பொருட்கள், கண்ணிவெடிகளினால் ஏற்படும் அனர்த்தங்களினால் மனித உரிமைகள் நெருக்கடிக்குள்ளாகின்றன.


அண்மைக்காலமாக இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலும் அதன் எல்லைப்புறப் பிரதேசங்களிலும் மேற்கூறப்பட்ட வகையிலான மனித உரிமை மீறல்கள் ஏராளமாக ஏற்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ~~வடக்கு கிழக்கில் கண்ணிவெடி~~ **UXO** ஆபத்து காணப்படும் பிரதேசங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே தரப்பட்டுள்ள கட்டுரைப்பகுதி, கண்ணிவெடி காணப்படும் பிரதேசங்களைக் காட்டுகின்ற தேசப்படம், கண்ணிவெடியினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய வரைபடம், ஆகியவற்றை நன்கு கற்று பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுக.

செயற்பாடு -1

இங்கு காட்டப்பட்டுள்ள அட்டவணையை பூர்த்தி செய்க.

| மாவட்டம் | பெருமளவிலான கண்ணிவெடி | இடைப்பட்டளவிலான கண்ணிவெடி | மிகக் குறைந்தளவிலான கண்ணிவெடி |
|---|---|---|---|
| | | | |



கண்ணிவெடி அனர்த்தங்களுக்குள்ளான மாவட்டங்களை காட்டும் படத்தை உபயோகித்து நீர் அட்டவணையில் பூர்த்தி செய்த (ஏராளமான, இடைப்பட்ட, குறைந்தளவு தொகை) முறைக்கேற்ப இங்கு தரப்பட்டுள்ள இலங்கை புற உருவப்படத்தில் நிறந்தீட்டிக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு - 2

''கண்ணிவெடி அனர்த்தங்கள் நிகழும் பிரதேசங்களில் மக்கள் இழக்க நேரிடும் மனித உரிமைகளை பாதுகாத்தல்'' என்ற தலைப்பில் பொருத்தமான ஆக்கமொன்றை முன்வைக்குக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................
4. ..........................................................................................................................
5. ..........................................................................................................................
6. ..........................................................................................................................
7. ..........................................................................................................................
8. ..........................................................................................................................

செயற்பாடு - 3

இலங்கையில் கண்ணிவெடி அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காக வேண்டி, ஐக்கிய நாடுகள் சபையின் உதவி நிகழ்ச்சித் திட்டமொன்றால் வெளியிடப்படும் செய்தி இதழுக்கு ''கண்ணிவெடி அனர்த்தங்களினால் இழக்கப்படும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல்'' என்ற தலைப்பில் பொருத்தமான ஆக்கமொன்றை முன்வைக்குக.
(கட்டுரை, கவிதை, ஓவியக்கதை, சிறுகதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : **சமுகக்கல்வியும் வரலாறும்**
தரம் : 11
அலகு : 11.4 சனநாயகம்
உபஅலகு : சனநாயகத்தின் அடிப்படை அம்சங்கள்
விடயம் : "வாழ்க்கையைப் பாதுகாப்போம்
கண்ணிவெடியினை ஒழித்திடுவோம்"

இத் தலைப்பின் கீழ் அண்மையில் ஒலிபரப்பப்பட்ட தொலைக்காட்சி விவரண நிகழ்ச்சியைப் பார்த்த சங்கரி என்ற மாணவி குறிப்பெடுத்துக் கொண்ட சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- வாழ்வதற்கான உரிமை, பயமின்றி சந்தோஷமாய் வாழும் உரிமை, எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு பகுதிகளிலும், வாழ்வதற்கான உரிமை போன்ற மனித உரிமைகள் ஐ.நா.வின் சர்வதேச பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உ-ம்:

- கம்போடியாவில் 236 பேருக்கு ஒருவரும், அங்கோலாவில் 420 பேரில் ஒருவரும் அங்கவீனராகவுள்ளனர்.

- வளைகுடா யுத்தத்தில் 34%மானோர் வியட்னாம் போரின்போது 33%மான பேரும் கண்ணிவெடி அனர்த்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

- கம்பூச்சியாவில் தற்போது 4 முதல் 6 மில்லியன்வரை நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

- கண்ணிவெடிப் பீதியினால் மக்கள் தமது சொந்த நிலங்களுக்குச் செல்லமுடியாது பயத்துடன் வேறிடங்களில் வாழமுற்படுவதனால் பொருளாதார சமூகத் தாக்கங்கள் ஏற்படுகின்றன.

- இவ் அனர்த்தம் காரணமாகச் சிறார்கள் தமது பாடசாலைக் கல்வியினை இழப்பதுடன் வளரும் பருவத்திலேயே வாழ்க்கைச் சுமையினை ஏற்கவும் வேண்டியேற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்திக் கீழ்வரும் செயற்பாடுகளைச் செய்க.

செயற்பாடு - 1

1. 1948ஆம் ஆண்டு **UNO**வின் அகில உலக மனித உரிமைகள் பிரகடனத்தில் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் யாவை?

......................................................................................................................

......................................................................................................................

2. வாழ்வதற்கான உரிமை எவ்வாறு கண்ணிவெடி அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது. விளக்குக.

......................................................................................................................

......................................................................................................................

3. பயமின்றி சந்தோசமாக வாழவுள்ள உரிமை கண்ணிவெடி அனர்த்தத்தினால் எவ்வாறு பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது. விளக்குக.

......................................................................................................................

......................................................................................................................

4. எந்தவொரு நாட்டிலும், பிரதேசத்திலும் வாழ்வதற்கான உரிமை கண்ணிவெடி அனர்த்தத்தினால் எவ்வாறு பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறது என்பதை விளக்குக.

......................................................................................................................

......................................................................................................................

செயற்பாடு - 2

கண்ணிவெடி அனர்த்தத்தின் காரணமாக மனித உரிமைகள் எவ்வாறு மீறப்படுகின்றன என்பது சம்பந்தமாக பத்திரிகை ஒன்றுக்குக் கட்டுரை ஒன்று எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு

தரம் : 11
அலகு : 11.3 சமகாலப் பிரச்சினை
உப அலகு : 11.3.6 குடும்ப அங்கத்தவர் எதிர்நோக்கும் பிரச்சினை

"எனக்கும் சுதந்திரமாய் வாழ ஆசை"

- 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வை அடுத்து இன்றைய சமாதான சூழ்நிலையில் மீள் குடியேற்றத்திற்காக சென்றபோது தவறுதலாக மிதிவெடி மீது கால் பட்டதனால் தன் ஒரு காலை இழந்த கயல்விழியிடம் இருந்து பெறப்பட்ட கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

கூற்று-1

- குடும்ப நிலை வறுமையாக இருந்தபோதும் என்னால் குடும்ப அங்கத்தவர்களுக்கு உதவ முடியவில்லையே என்ற ஏக்கம் என்னுள் உள்ளது.
- எனது தேவைகளை என்னால் முழுமையாக நிறைவு செய்ய முடியவில்லையே என்ற துக்கம்.
- சுயதொழிலில் ஈடுபட மூலதனம் இல்லை.

கூற்று-2

- சகபாடிகளுடன் வழமையான செயற்பாடுகளில் ஈடுபட விரும்புகிறேன்.
- எனது தனிமை என்னை ஆழமாக ஆக்கபூர்வமாக சிந்திக்க வைத்தாலும் சிந்தனைகளைச் செயற்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்துகிறது.
- முன்னர் கிடைத்த வழமையான மகிழ்வு குறைவு அடைவதாகக் கருதுகின்றேன்.

கூற்று-3

- சமூகத்திற்கு என்னால் என்ன வேலை செய்யலாம் என சிந்திக்கிறேன்.
- சமூக செயற்பாடுகளில் பங்குபற்ற முடியவில்லையே என்று கவலைப்படுகிறேன்.
- பொது இடங்களில் உரிய மதிப்போ, சலுகையோ அளிக்கப்படுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த கூற்றுக்களை நன்கு வாசித்த பின்னர் பின்வருவனவற்றுக்கு விளக்கம் தருக.

1. கண்ணிவெடியில் பாதிக்கப்பட்டவர் எவ்வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குவார்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

2. இவருக்கு மற்றவர்கள் செய்யக்கூடிய சேவைகள் யாது?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

3. மேற்குறித்த நபர் தொடர்பாக உதவக்கூடிய அரசசார்பற்ற (NGO) நிறுவனங்கள் எவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. இவர் உமது சமூகத்தில் இருப்பார் ஆயின் இவரை ஈடுபடுத்தக்கூடிய சுய தொழில் வேலைவாய்ப்பு பற்றிக் குறிப்பிடுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

5. பாதிக்கப்பட்டவர் ஒரு பாடசாலை மாணவராக இருந்தால் தனிப்பட்ட ரீதியாக நீர் செய்யக் கூடிய உதவி யாது?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

6. இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு கயல்விழி மற்றவர்களுக்கு கூறும் அறிவுறுத்தல்கள் யாவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு

தரம் : 11

அலகு : 11.3 சமகாலப் பிரச்சினை

உப அலகு : 11.3.6 கண்ணிவெடி அனர்த்தங்களுக்கு உட்பட்ட குடும்பம் ஒன்று தொடர்பாக அயலில் உள்ள மக்களின் நடவடிக்கைகள் பற்றித் தெளிவாகக் கலந்துரையாடுவர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு - 1

இங்கு காட்டப்பட்டுள்ள பொருட்களை அவதானித்து கண்ணிவெடிப் பொருட்களையும், கண்ணிவெடியில்லாப் பொருட்களையும் தெரிந்து அவற்றுக்குரிய கூட்டினுள் அவற்றின் இலக்கங்களை எழுதுக.

| கண்ணிவெடிப் பொருட்கள் | கண்ணிவெடியில்லா பொருட்கள் |
|---|---|
| ................................................................ | ................................................................ |
| ................................................................ | ................................................................ |
| ................................................................ | ................................................................ |
| ................................................................ | ................................................................ |

செயற்பாடு - 2


கண்ணிவெடி மற்றும் **UXO** கண்ணிவெடி என்பனவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை வேறுபடுத்திக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் : 11

அலகு : 11.3 சமகாலப் பிரச்சினை




செயற்பாடு - 1

இங்கு காட்டப்பட்டுள்ள படத்தை அவதானியுங்கள். ஒருவர் கண்ணிவெடிப் பிரதேசத்தினால் நுழைந்துள்ளதை உணரும்போது அவர் செய்யவேண்டிய விடயங்கள் இப்படத்தில் ஒழுங்கீனமாகத் தரப்பட்டுள்ளது. அவற்றை ஒழுங்குபடுத்திக் கூறுக.

1. ..........
2. ..........
3. ..........
4. ..........
5. ..........

செயற்பாடு - 2

எதிர்பாராத கண்ணிவெடிப் பிரதேசத்துக்குள் நுழைந்துள்ள ஒருவர் மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள அறிவுரைகளை ஏன் பின்பற்ற வேண்டும் என்பதற்கான காரணங்களை ஒவ்வொன்றின் கீழும் எழுதிக்காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு

பாடம் : **சமுகக்கல்வியும் வரலாறும்**

தரம் : 11

அலகு : 11.3 சமகாலப் பிரச்சினை

உப அலகு : 11.3.8 இருளிலிருந்து ஒளியை நோக்கி

- குடும்பத்தலைவா் ஒருவா் தொழிலுக்கு செல்கையில் கண்ணிவெடி மூலம் தனது காலொன்றை இழக்கின்றாா்.
- இச்சம்பவம் தொடர்பாக பின்வருவோர் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகளை வகைப்படுத்தித் தருக.

செயற்பாடு -

| நபா் | குடும்பப் பிரச்சினை | சமூகப்பிரச்சினை |
|---|---|---|
| மனைவி | | |
| மகள் | | |
| மகன் | | |

செயற்பாடு - 2

குடும்பத் தலைவா் தலைவி கண்ணிவெடியில் பாதிக்கப்படும்போது குடும்ப அலகொன்று சீா்குலைந்து விடாமல் மனவுறுதியுடன் வாழ்க்கைச் சவால்களை எதிா்கொள்ள முடியுமா அல்லது முடியாதா என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஒன்றை ஏற்பாடு செய்க.

செயற்பாடு - 3

- பாடசாலையில் உள்ள ஆண் சாரணியம் அல்லது பெண் சாரணிய அமைப்பினை வரவழைத்து வழங்கக்கூடிய பல்வேறு சேவைகளை இனங்காட்டல்.
- உதவிகளை 5ஆகப் பிரித்து 5 குழுத் தலைவரிடம் ஒப்படைத்தல்.
- இதுவே இம்மாத வேலைத்திட்டம் என அறிவுறுத்துவதோடு குறித்த தினத்தில் அதற்குரிய ஆதாரபூர்வமான அறிக்கை தயாரிக்குக.
- குறித்த தினத்தில் இடம்பெறும் பாசறை அல்லது ஒன்று கூடலின்போது பகுப்பாய்வு செய்து பொது அறிக்கை தயாரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org